

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி வல்லவாரி ஊராட்சி தொண்டைமான் குடியிருப்பு ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிச்சின்னமான உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு வாக்குச் சேகரித்தார்.



தமிழ்நாடு மாநில சோழிய வெள்ளாளர் சங்கத்தின் சார்பில், திருவெறும்பூர் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்துத் தங்களது முழு ஆதரவைத் தெரிவித்தனர். இதில் மாநிலத் தலைவர் டாக்டர் செந்தில் பிள்ளை தலைமையில் சோழிய வெள்ளாளர் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகளான கோவிந்தராஜ், பேராசிரியர் மாணிக்கம், தங்க ரத்தினகுமார், திருநாவுக்கரசு மற்றும் மாவட்ட, மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தி.மு.க,வின் கூட்டணி பலம், அரசின் சாதனைகள், தி.மு.க, தேர்தல் அறிக்கை – மூன்று காரணங்களுக்காக

# தி.மு.க. கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும்!

## திண்டுக்கல் தொகுதி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமாரை ஆதரித்து தொல்.திருமாவளவன் தேர்தல் பிரச்சாரத்தில் பேச்சு!

திண்டுக்கல், ஏப். 10 –

தி.மு.க. கூட்டணியில் உள்ளவர்களுக்கு அரசியல் பொருத்தம் இருக்கிறது, கொள்கை பொருத்தம் இருக்கிறது, கோட்பாடு பொருத்தம் இருக்கிறது அதன் காரணமாகத்தான் பல ஆண்டுகளாக கூட்டணியில் நீடிக்கிறோம் என்று திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமாரை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவனத் தலைவர் தொல்.திருமாவளவன் பேசும்போது குறிப்பிட்டார்.



திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் ஐ,பி.செந்தில்குமாரை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவன தலைவர் தொல்.திருமாவளவன் காமராஜபுரத்தில் வேனில் இருந்தபடி ஆதரித்து பிரச்சாரம் செய்தார் .

அவர் பேசுகையில் : செந்தில்குமார் ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

மீண்டும் சட்டமன்றத்திற்கு செல்வார் உங்கள் உணர்வுகளை சட்டமன்றத்தில் பிரதிபலிப்பார். உங்களுக்காக குரல் கொடுத்து பேசுவார் ஆனால் தான் அவரை தேடி வந்திருக்கிறேன் உன்னுடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக அவரது வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக வந்துள்ளேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலத்தில் இருந்து திமுகவுடன் 30 ஆண்டுகளாக பயணிக்கலாம் 25 30 ஆண்டுகளாக இணைந்து பயணிக்கின்றோம்.

பெரியார் அண்ணா ஆகிய மாமேதில் பல்கலை உள்வாங்கிக் கொண்டு ஏழை மக்களுக்காக போராடுகின்ற ஒரு இயக்கம் தான் திராவிட முன்னேற்ற கழகம் என்ற கொள்கையின் அடிப்படையில் தான் பயணித்து வருகிறோம்.

இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இருந்து விடுதலை சிறுத்தைகள் கட்சி வெளியேறிவிடும் என பலரும் பேசினார்கள் என்னிடம் ஆசை காட்டி பார்த்தார்கள்.

திருமாவளவன் கூட்டணியில் இருந்து விலகினால் அந்த கூட்டணியை பலவீனப்படுத்தி விட முடியும் சிதறித்து விட முடியும் தி.மு.க. விழித்து விட முடியும் என்றெல்லாம் கணக்கு போட்டு பார்த்தார்கள்.

நான் பெரியார் அரசியலை உள்வாங்கியவன் அம்பேத்கர் அரசியலை படித்தவன் காரல் மார்க்ஸ் கொள்கைகளை அறிந்தவன் புரிந்தவன் சன்பரிவார அமைப்புகளுக்கு இடமில்லை என்பதில் விடுதலை சிறுத்தைகள் உறுதியாக இருக்கிறது.

அ.தி.மு.க. பா.ஜ.க.வை தனது தோளில் தூக்கி வருகிறது அவர்களாலே நியாயப்படுத்தி சொல்ல முடியாது. நாங்கள் தி.மு.க.வுடன் ஏன் கூட்டணி வைத்திருப்பதை நாங்கள் நியாயப்படுத்த முடியும் திமுகவுடன் இருக்கிறோம் கூட்டணியில் பயணிக்கின் றோம் காரணங்களை சொல்ல முடியும்.

எடப்பாடி பழனிச்சாமியால் பாஜகவுடன் கூட்டணி வைத்தது நியாயப்படுத்தி சொல்ல முடியுமா எந்த அடிப்படையில் பிஜேபியோட அதிமுக கூட்டணி வைத்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா புது மேடையில் எனது அரசியல் வாழ்வில் நான் பெரும் தவறு இழைத்து விட்டேன் பிழை செய்துவிட்டேன் பாஜகவுடன் கூட்டணி வைத்தது நான் செய்த பெரும் பிழை செய்துவிட்டேன் அதற்கு பரிகாரமாக தான் அவர்களின் ஆட்சியை கவிழ்த்தேன். என சொன்னவர் ஜெயலலிதா.

ஜெயலலிதா இருக்கும்போது ஒரு காலத்திலும் பாஜகவுடன் கூட்டணி அமைக்காது என சொன்னார் இது எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரியுமா தெரியாதா அதிமுக பாஜகவுடன் எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தது என்பதை நியாயப்படுத்த முடியுமா முடியாது.

அந்தக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்சியும் ஒருவருக்கு ஒருவர் கடுமையாக விமர்சித்துக் கொண்டவர்கள் மட்டுமின்றி சவால் விட்டுக் கொண்டவர்கள் எடப்பாடி உடன் கூட்டணி வைத்தால் தூக்கு போட்டு சாகலாம் என்று சொன்ன தலைவர் அதிமுக கூட்டணியில் தற்பொழுது இருக்கிறார்.

எடப்பாடி கடுமையாக விமர்சித்த அன்புமணி ராமதாஸ் தற்போது அதிமுக கூட்டணியில் இருக்கிறார்.

பா.ஜ..கவை கடுமையாக விமர்சித்த எடப்பாடி தற்போது அவர்களுடன் கூட்டணி வைத்துள்ளார்.

கொஞ்சம் கூட அவர்களுக்கு கருத்து அடிப்படையில் எந்த பொருத்தமும் கிடையாது.

தற்பொழுது தேர்தல் ஆதாயத்திற்கு மட்டுமே கைகோர்த்து உள்ளனர். இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் பாஜகவினர் தங்களது கைவரிசைகளை காட்ட முடிகிறது ஆனால் தமிழகத்தில் காட்ட முடியவில்லை.

பா.ஜ.க.வால் கடந்த 25 ஆண்டுகளாக எவ்வளவு முயற்சி செய்தும் தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை அதற்குக் காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஜெயலலிதா என்பதை யாரும் மறந்து விட முடியாது.

தி.மு.க. கூட்டணியில் உள்ளவர்களுக்கு இடையே முரண்பட்டது உண்டு விமர்சனம் செய்தது உண்டு. ஆனால் அடிப்படையில் கைகோர்த்து நிற்பதற்கான காரணம் அரசியல் பொருத்தம் இருக்கிறது. கொள்கை பொருத்தம் இருக்கிறது கோட்பாடு பொருத்தம் இருக்கிறது அதனால் தான் கூட்டணி நீடிக்கிறோம்.

அ.தி.மு.க. வைத்திருக்கும் கூட்டணி அரசியல் சட்ட அமைப்பு எதிரான கூட்டணி பா.ஜ.க. வெறுப்பு அரசியலையும் மதம் சார்ந்த அரசியலையும் உயர்த்திப் பிடிக்கின்றனர் இது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான கூட்டணி பா.ஜ.க. கூட்டணி.

அதனால்தான் 2016 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. கூட்டணியில் இருந்து ஒரு கட்சி கூட வெளியேறாமல் தொடர்ந்து நீடித்து வருகிறது தற்பொழுது தே.மு.தி.க. சேர்ந்துள்ளது எஸ்.டி.பி.ஐ. சேர்ந்துள்ளது பல கட்சிகள் சேர்ந்துள்ளது.

ஆட்சியில் பங்கு அமைச்சரவையில் பங்கு எனக் கூறிய விஜய் கட்சிக்கு எந்த கட்சியில் சேரவில்லை கூவை கூவி அழைத்தும் கூட யாரும் போய் சேரவில்லை.

தி.மு.க. கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும் என்று தளபதி சொன்னார். அதற்கு மூன்று காரணங்கள் ஒன்று கூட்டணி பலம், அரசியல் சாதனைகள், அரசின் சாதனைகள், தேர்தல் அறிக்கை என பேசினார்.

### அ.தி.மு.க. முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்

# அழகு சுப்பையா உள்ளிட்ட 1000 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில்!

புதுக்கோட்டை, ஏப்.10-

புதுக்கோட்டை தெற்கு. மாவட்டம் பொன்னமராவதியில் அ.தி.மு.க.வில் இருந்து விலகிய முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் அழகு சுப்பையா தனது ஆதரவாளர்களுடன் அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.



பொன்னமராவதி தி.மு.க. கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றுக்கட்சிகளிலிருந்து தி.மு.க.வில் இணையும் நிகழ்வு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் தி.மு.க. தெற்கு ஒன்றியச் செயலாளர் அ.அடைக்கலமணி, தி.மு.க. நகரச் செயலாளர் அ.அழகப்பன், ஆகியோர் ஏற்பாட்டில் பொன்னமராவதி முன்னாள் அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் மற்றும் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் அழகு சுப்பையா தமது ஆதரவாளர்கள் 1000 பேருடன் அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்றுக்கட்சிகளிலிருந்து விலகி இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்தவர்களுக்கு அமைச்சர் எஸ். ரகுபதி கருப்பு சிவப்பு துண்டு அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு ஒன்றியச் செயலாளர் அ.முத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், மாவட்டப் பிரதிநிதி சிக்கந்தர், மாவட்ட விவசாய அணி நிர்வாகி ஆலவயல் மிராஸ் பெரி.அழகப்பன் அம்பலம், வெங்கடேஷ், சீமாட்டி லத்தீப், வேந்தன் பட்டி அப்துல், இளைஞரணி துணைஅமைப்பாளர் இளையராஜா, சுந்தரி ராமையா, ஆலவயல் முரளி சுப்பையா, மணப்பட்டி பழனிச்சாமி, இடையாத்தூர் பாண்டியன், முருகேசன், சுரேஷ், கிரிதரன், பழனியப்பன், சோலையப்பன், திமுக மூத்த முன்னோடிகள், நகர, கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள் நகரச் செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, தகவல் தொழில்நுட்ப அணியினர் மற்றும் கூட்டணிக் கட்சியினர் என பலர் பங்கேற்று தி.மு.க.வில் இணைந்தவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

### சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (7வது பட்டியல்)

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - | பார்வையாளர் |
|---|---|---|
| புவனகிரி, சிதம்பரம் | – | எம்.ஆர்.கே.பி.கதிரவன் |
| திருவிடைமருதூர் | – | மேகநாதன் |
| திருவில்லிப்புத்தூர் | – | மல்லி ஆறுமுகம் |
| விருதுநகர் | – | ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் |
| திருச்சுழி | – | எம்.ஏ.சந்திரன் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 08.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின்

# கழக வேட்பாளர்களை ஆதரித்து - தமிழ் மாநில தேசிய லீக் பிரச்சாரம்!

## திருப்பூர் அல்தாப் அறிக்கை!

சென்னை, ஏப்.10-

தமிழ்மாநில தேசியலீக் கட்சியின் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரம் செய்ய தமிழ்மாநில தேசியலீக் முடிவு செய்துள்ளது. தி.மு.க. வுடன் நீண்டநாள் தோழமையுடன் உள்ள நாங்கள் தியாக உணர்வுடன் கடமை ஆற்றிடுவோம்.

இந்திய ஒன்றியத்தை ஆளும் பாசிச மதவாத ஆர்.எஸ்.எஸ் கும்பல் எவ்விதத்திலும் தமிழ்நாட்டில் கால் ஊன்றவிடக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். மோடி, எடப்பாடி தலைமையிலான மதவாத கூட்டணியை தோற்கடிக்க சிறுபான்மையினராகிய தமிழ் மாநில தேசிய லீக் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவாக தமிழ்நாடு முழுவதும் தீவிரப் பிரச்சாரம் செய்கிறோம்.

இவ்வாறு தமிழ் மாநில தேசியலீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் தெரிவித்துள்ளார்.




கோவை மாவட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள், வீராங்கனைகள் கூட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கே.நித்தியானந்தன் அறிமுகக் கூட்டம் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், சூலூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்த நாயக்கன்பாளையம் பேளூர் காளி செட்டியூர் ஊராட்சி முன்னாள் பால் கூட்டுறவு சங்க துணைத் தலைவரும், அ.தி.மு.க., கிளைச் செயலாளருமான விஜயகுமார் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். அப்போது மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், பேளூர் செயலாளர் வெங்கடேஷன் ஆகியோர் உடனிருந்தனர்.